

சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நேற்று (12.9.2025) சிம்பொனி சிகரம் தொட்ட தமிழன் இசைஞானி இளையராஜா அவர்களின் இசைக் குறிப்புகளை கொண்டு சிம்பொனி இசை அமைத்த தி ராயல் பில்ஹார் மோனிக் கான்சர்ட் ஆர்க்கெஸ்ட்ரா குழுவினைச் சேர்ந்த 85 இசைக்கலைஞர்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சார்பில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பாராட்டி நினைவு பரிசு வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், முதலமைச்சரின் செயலாளர் முனைவர் ம.க. சண்முகம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன் ஆகியோர் உடனிருந்தனர்.



ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட அய்யப்பன்தாங்கல் ஊராட்சியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் அரசின் நலத்திட்ட உதவிகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ. வந்தேமாதரம், ஒன்றியக் குழு உறுப்பினர் லோகநாயகி சுவாமிநாதன், உஷா நந்தினி எத்திராஜ், ஊராட்சி மன்றத் தலைவர் ஜெமிலா பாண்டுரங்கன், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அண்ணா பிறந்த நாள் அன்று

# 2404 வாக்குச்சாவடிகளிலும் கூட்டங்கள் நடத்தி உறுதி மொழி ஏற்றிடுவீர்!

## மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு! மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

காஞ்சிபுரம், செப்.13-

நாளை மறுநாள் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் அன்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 2404 வாக்குச்சாவடிகளிலும், வாக்குச்சாவடி வாரியாக BLA-2, BDA, BLC ஆகியோர் பங்கேற்கும் வாக்குச்சாவடி கூட்டங்களை நடத்தி, அந்தந்த வாக்குச்சாவடிகளில் "ஓரணியில் தமிழ்நாடு" திட்டத்தின் கீழ் கழகத்தில் உறுப்பினர்களாக இணைந்த குடும்பங்களை அழைத்து, அவர்களையும் பங்கு பெற செய்து. அக்கூட்டங்களில் அனைவரும் இணைந்து உறுதிமொழி ஏற்றிட வேண்டும் என்று மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறிபுள்ளார்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் 10 பூத் தேர்தல் ஒருங்கிணைப்பாளர்கள் கலந்தலோசனைக் கூட்டம் ஆலந்தூர் கத்திப்பார மேம்பாம் அருகில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பசரன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டத் துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், து.மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி தலைவர் படப்பை ஆ. மனோகரன், தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி. சி. அன்புசெழியழன், ஆதிமாறன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.டி.பூபாலன், கீதாஆனந்தன், மா. கணேஷ்பாபு, க.தேவேந்திரன், செ.அருள்தேவி ஒன்றிய செயலாளர்கள் எல். இதயவர்மன், எஸ்.டி.கருணாநிதி, ந.கோபால், பையனூர் சேகர், ஏ.வந்தேமாதரம், ஜி.கே.ரவி, எம்.டி. லோகநாதன், கே.பி.ராஜன், பகுதி செயலாளர்கள் பி. குணாலன், என்.சந்திரன், வே.கருணாநிதி, த.ஜெயகுமார், எஸ்.இந்திரன், ஏ. கே.கருணாகரன், இ.எஸ். பெர்னார்ட், ஆர்.சுரேஷ், நகர செயலாளர்கள் ஜெ. சண்முகம், எம்.கே.டி.கார்த்திக், கோ.சத்தியமூர்த்தி, எஸ்.ஐபரூல்லா, த.வினோத் குமார், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜன், ஜி. டி.யுவராஜ், கழக சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் சாய்ஜெயகாந்த்பாரதி, கழக மருத்துவ அணி துணைச் செயலாளர் கிருத்திகாதேவி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வி.விஜயகுமார், துணை அமைப்பாளர் வி. விஜயகுமார், கோ.ஜானகிராமன், கழக அணிகளின் நிர்வாகிகள் எஸ்.கே.நெப்போலியன், உதயா கருணாகரன், ஜெயராம் மார்த்தாண்டன், தி.க.பாஸ்கரன், ஆர். கோவிந்தன், டி.பி.செந்தில் குமார், டி,எஸ்.எம் ஜெயகரன், டி.ஆர். சாரதிபெரியநாயகம், எஸ்.ஆல்பர்ட் மற்றும் 10 வாக்குச்சாவடி தேர்தல் ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மா னங்கள்.

தமிழ்நாட்டின் மண் - மொழி - மானம் காத்திடவும், தமிழ்நாட்டின் உரிமைகளைக் காத்திடும் பொருட்டும் "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை திட்டத்தை கொண்டு வந்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குடும்பங்களும் ஒரு குடையின் கீழ் ஒன்றாய் இணைந்து வருகிற சட்டமன்றத் தேர்தலை எதிர் கொள்ள வேண்டும் என்று நம்முடைய உயிரினும் மேலான அன்புத்தலைவர் தமிழ்நாடு முதல் அமைச்சர் அவர்கள் அன்புக் கட்டளையிட்டார்.

நம்முடைய நெஞ்சம் நிறைந்த அன்புத்தலைவர் அவர்களின் அன்புக்கட்டளையை ஏற்று, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளிலும் சேர்த்து மொத்தம் 9,80,526 நபர்களை கழகத்தில் உறுப்பினர்களாக இணைத்து சாதனை படைத்துள்ளோம்.

தமிழ்நாட்டின் நலனைப் பாதுகாக்கும் பாதுகாவலர்களாக "ஓரணியில் தமிழ்நாடு" இயக்கத்தில் நம்முடன் இணைந்திருக்கும் அனைவரையும் சட்டமன்றத் தேர்தல் வரைக்கும் நம்முடைய இணைத்துக் கொண்டு களப்பணியாற்ற வேண்டும் என்றும்,

அதற்கான உறுதி மொழியை வருகிற செப்டம்பர் - 15, பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்று வாக்குச்சாவடி வாரியாக கூட்டங்களை நடத்தி, அந்த கூட்டங்களில் எல்லோரும் இணைந்து உறுதி மொழி எடுக்க வேண்டும் என்று நம்முடைய ஒப்பாரும் - மிக்காரும் இலா அன்புத்தலைவர் அவர்கள் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் மாபெரும் அறிவிப்பை வெளியிட்டார்.

அதன்படி நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளில் அடங்கியுள்ள 2404 வாக்குச்சாவடிகளிலும், "காஞ்சித் தலைவன்" "அறிவுலக மாமேதை" "தென்னாட்டு பெர்னாட்சா" "இன்நாட்டு இங்கர்சால்" பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான செப்டம்பர் 15-ஆம் தேதி அன்று காலை 9.00 மணியளவில்,

அந்தந்த வாக்குச்சாவடிகளில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தை அலங்கரித்து வைத்து - மலர்தூவி அஞ்சலி செலுத்தி, அதன் பின்னர் BLA-2, BDA, BLC ஆகியோர் பங்கேற்கும் வாக்குச்சாவடி கூட்டங்களை நடத்தி, "ஓரணியில் தமிழ்நாடு" திட்டத்தின் கீழ் கழகத்தில் உறுப்பினர்களாக இணைந்த குடும்பங்களை அழைத்து, அவர்களையும் பங்கு பெற செய்து. அக்கூட்டங்களில் அனைவரும் இணைந்து உறுதிமொழி எடுத்து கொள்ள வேண்டும் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகம் ஏகமான தாக முடிவெடுக்கிறது.

வரலாற்றுப் பெருமை வாய்ந்த காஞ்சிபுரம் மண்ணில் பிறந்து தனது அடுக்கு மொழி பேச்சாற்றலாலும் - எழுத்தாற்றலாலும் - அறிவாற்றலாலும் தமிழக மக்களை கவர்ந்த மாபெரும் அரசியல் தலைவர் - நம்மை எல்லாம் ஆளாக்கிய "காஞ்சி தந்த காவியத் தலைவன், "தென்னாட்டு காந்தி, "இந்நாட்டு இங்கர்சால், என்று அனைவராலும் போற்றி புகழப்படும் அரசியல் மாமேதை, எந்நாளும் பொது வாழ்வில் எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று உறுதியோடு இறுதி நாள் வரை வாழ்ந்து மறைந்தும் மறையாமல் நம் இதயங்களில் வாழ்கின்ற காஞ்சித் தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்களின் 117-வது பிறந்த நாளான வருகிற செப்டம்பர் 15-ஆம் தேதி யன்று காலை 9.00 மணிக் கெல்லாம்,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர்களில் கிளை - வார்டுகளில் உள்ள அனைத்து கழகக் கொடிக் கம்பங்களிலும் கழக கொடியேற்றியும் அதன் அருகே அறிஞர் அண்ணாவின் திருஉருவப் படத்தினை அலங்கரித்து வைத்தும், சர்க்கரை பொங்கல் - இனிப்பு வழங்கியும் வழக்கம் போல மிகவும் எழுச்சியுடன் பேரறிஞர் அண்ணா அவர்களின் 117-வது பிறந்தநாள் விழாவை மாவட்டம் முழுவதும் மிகச் சிறப்பான முறையில் கொண்டாடுவது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஒருமனதாக தீர்மானி க்கிறது.

2025 - தி.மு.க. முப்பெரும் விழா முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையில் வருகிற 16.9.2025 புதன்கிழமை மாலை 5.00 மணியளவில் கரூரில் நடைபெறுகிறது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், கழக நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழக செயலாளர்கள் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் கரூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பிப்பது என காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. ஒருமனதாக முடிவெடுக்கிறது.



சென்னை கிழக்கு மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் ஆ.அஜித் சரவணன் இல்ல மணவிழா வரவேற்பில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார். மேலும் மேயர் ஆர்.பிரியா, பகுதி செயலாளர் சொ. வேலு, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் க.ராஜ் முகமது,மாநில அயலக அணி துணைச் செயலாளர் பரிதி இளம்சுருதி எம்.சி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட அமைப்பாளர் ஜி. தாமோதரன், பகுதி துணைச் செயலாளர் பி.சி. சம்பத்குமார், நெசவாளர் அணி மாவட்ட தலைவர் கே. கோகுல்,வட்டக் கழகச் செயலாளர்கள் ஆர். எம்.ரங்கநாதன், சி.சேகர் உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களில்

# 20 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டம்!

## பிள்ளையார்பட்டியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சிவகங்கை, செப்.13-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி இந்து சமய அறநிலைத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (12.09.2025) சிவகங்கை மாவட்டம், பிள்ளை யார் பட்டி, அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோயிலில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பணிகளை நேரில் பார்வையிட்டு, அத்திருக்கோயிலுக்கு சொந்தமான நிலத்தில் மரக்கன்றினை நட்டு வைத்து, திருக்கோயிலுக்கு சொந்தமான பயன்பாடற்ற நிலங்களில் 20 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை தொடங்கி வைத்தார்.



2025 - 2026 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை சட்டமன்ற மானிய கோரிக்கை அறிவிப்பில், 13 திருக்கோயிலில் செயல்படுத்தப்பட்டு வரும் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் இந்த ஆண்டு சிவகங்கை மாவட்டம், பிள்ளை யார் பட்டி அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோயில் மற்றும் திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் அருள்மிகு குறிஞ்சி ஆண்டவர் திருக்கோயில்களுக்கு விரிவு படுத்தப்படும்" என்றும் "திருக்கோயில்களுக்கு சொந்தமான பயன்பாட்டில் இல்லாத நிலங்களில் ஒரு இணை ஆணையர் மண்டலத்திற்கு ஒரு லட்சம் வீதம் 20 லட்சம் மரக்கன்றுகள் நட்டு பராமரிக்கப்படும்" என்றும் அறிவிக்கப் பட்டது.

இந்த அறிவிப்புகளை நிறைவேற்றிடும் வகையில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (12.09.2025) சிவகங்கை மாவட்டம், பிள்ளை யார் பட்டி அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோயிலுக்கு வருகை தந்து, திருக்கோயிலில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை தொடங்குவதற்கான முன்னேற்பாடு பணிகளை ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோயிலுக்கு சொந்தமான நிலத்தில் மரக்கன்றுகளை நட்டு வைத்து, திருக்கோயிலுக்கு சொந்தமான பயன்பாடற்ற நிலங்களில் 20 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தினை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மண்டல இணை ஆணையர் திருமதி பாரதி, சைவ ஆகம வல்லுநர் பிச்சை குருக்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆலோசனை! ஆர்.சுந்தர்ராஜன் தலைமை!

# ஆலந்தூர் தெற்கு பகுதி தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் என்.சந்திரன் எம்.சி. அறிக்கை!

சென்னை,செப்.13-

மண்டல குழு தலைவர், ஆலந்தூர் தெற்கு பகுதிச் செயலாளர் என்.சந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

ஆலந்தூர் தெற்கு பகுதி தி.மு.க.பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று 13.09.2025 (சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு நங்கநல்லூர் 100அடி சாலையில் அமைந்துள்ள என்.வி.ஆர். மகாலில் பகுதி அவைத் தலைவர் ஆர்.சுந்தர்ராஜன் தலைமையில், பகுதி நிர்வாகிகளான ஏ.சாலமோன், ஆர்.பாபு, ராஜேஸ்வரி சத்யா, இ.ரமேஷ் ஆகியோர் வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

எனவே ஆலந்தூர் தெற்கு பகுதிக்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதி- அனைத்து அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள் (BLA-2), வட்ட இளைஞர் அணி-மாணவர் அணி-மகளிர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், கழகத் தோழர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. 15.9.25 பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா!

2. ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை!

3. 17.9.25 அன்று கரூரில் நடைபெறும் முப்பெரும் விழா,

4. கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு ஆலந்தூர் தெற்கு பகுதிச் செயலாளர் என்.சந்திரன் தெரிவித்துள்ளார்.





கழக அரசின் நான்கு ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் கொடுமுடி வடக்கு – தெற்கு ஒன்றியத்தில் தி.மு.க. இளைஞரணி சார்பில் நடைபெற்றது. இதில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் தி.மு.க. இளைஞரணி துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். கழக நிர்வாகிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.